# தமிழ்நாடு அரசு

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006

## தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, ஏப்ரல் 2020

## செய்திக்குறிப்பு

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

ஏப்ரல் 2020–ம் ஆண்டில் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு **01.01.2020** அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் **27.01.2020 (திங்கட்கிழமை) முதல் 31.01.2020 (வெள்ளிக்கிழமை) வரை** **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) நேரில் சென்று on line மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– மற்றும் ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–மொத்தம் ரூ.175/–ஐ பணமாக சேவை மையங்களில் நேரடியாக செலுத்தலாம்.

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை**

**1.முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**2.ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

- தனித்தேர்வர்கள் ரூ.42–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

6. **சேவை மையங்கள் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள்**

ரூ.175/– தேர்வுக் கட்டணம் செலுத்தி **: 31.01.2020 அன்று மாலை 5.00 மணி வரை**

ஒம்/–

**இயக்குநர்**

**இடம் :** சென்னை–600 006

**நாள் :** 03 01 .2020

**DIRECTORATE OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI-6**

**EIGHTH STANDARD PUBLIC EXAMINATION (PRIVATE STUDY)**
**APRIL 2020**

# PRESS RELEASE

**Applications are invited for admission to the Eighth Standard Public Examination (Private study) to be held in April 2020 only from Private Candidates who have completed 12½ years of age as on 01.01.2020**

**Applications can be uploaded through online at the nodal centres mentioned in the website www.dge.tn.gov.in from 27.01.2020 to 31.01.2020**

**REMITTANCE OF EXAMINATION FEES :**

**The Examination fee of Rs.125/- and also online application Registration fee Rs.50/- Total Rs.175/- to be paid at the Nodal Centres by the candidate directly.**

**Enclosures :**

**1.For Direct Private Candidates (First time):**

*** Transfer Certificate (Xerox copy) / Record Sheet (Xerox copy) /**
*** Birth Certificate (Xerox copy) (Any one)**

**2. Already applied and failed, Now applying for failed subjects:**

*** Previous appearances-photo copy of certificates.**
**The candidates mentioned in Sl.No.1 and 2 should enclose a Self-Addressed cover with Stamp Rs.42/-**

**THE LAST DATE FOR APPLYING FOR THE EXAMINATION**

**By paying the fees amount of Rs.175/-: 31.01.2020 at 05:00 pm.**

**List of Nodal Centres & Candidate's Instruction is available in website www.dge.tn.gov.in**

**Sd/-**
**DIRECTOR**

**Place : CHENNAI-6**
**Date : 03.01.2020**

## தமிழ்நாடு அரசு

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

## தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, ஏப்ரல் 2020 அறிவுரைகள்

### ஆன்–லைன் (Online) மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்

ஏப்ரல் 2020–ம் ஆண்டில் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு 01.01.2020 அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் **27.01.2020 முதல் 31.01.2020 வரை** இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) சென்று ஆன்லைன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

### இணையதளத்தின் (Online) மூலம் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் முறை :

| தனித்தேர்வர்கள் வகை | விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர் |
|---|---|
| 8888 | அனைத்துப் பாடங்களுக்கும் விண்ணப்பிக்கவுள்ள தனித்தேர்வர்கள் |
| 9999 | ஏற்கனவே தேர்வெழுதி, தேர்ச்சி பெறாத பாடங்களுக்கு விண்ணப்பிக்கவுள்ள தனித்தேர்வர்கள் |

மேற்படி தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் தேர்வர் வசிக்கும் இருப்பிடத்திற்குட்பட்ட கல்வி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களில் மட்டுமே சென்று (Nodal Centre) விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பிக்கச் செல்லும் போது விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்ச கல்வித் தகுதிக்கான சான்றிதழின் நகலினை கண்டிப்பாக எடுத்துச் செல்ல வேண்டும். தனித்தேர்வர்கள் Nodal centre–க்கு நேரடியாகச் சென்று விண்ணப்பத்தினை பதிவு செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

Nodal centre–ல் பொருத்தப்பட்டுள்ள கணினி புகைப்படக் கருவிகள் (Web Camera) மூலமாக புகைப்படம் எடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளதால், அம்மையங்களிலேயே புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து கொண்ட பின்னர், அங்கேயே தேர்வுக்கட்டணம் செலுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**Online மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர். தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்த முன்னறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.**

<u>பாட விவரம்</u>

<table>
<tr><td>1.</td><td>மொழிப்பாடம்</td><td>தமிழ் (As per Tamil Learning Act 2006)</td></tr>
<tr><td>2.</td><td>ஆங்கிலம் (English)</td><td rowspan="4">தமிழ், ஆங்கிலம், உருது மொழிகளில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே விடையளிக்க வேண்டும். TO BE ANSWERED IN TAMIL, ENGLISH, URDU MEDIUM ONLY)</td></tr>
<tr><td>3.</td><td>கணக்கு (Mathematics)</td></tr>
<tr><td>4.</td><td>அறிவியல் (Science)</td></tr>
<tr><td>5.</td><td>சமூக அறிவியல் (Social Science)</td></tr>
</table>

தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்புப் பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கும் அனைத்து தனித்தேர்வர்களும் தற்போது நடைமுறையில் உள்ள புதிய **பாடத்திட்டத்தில்** மட்டுமே தேர்வெழுத வேண்டும் (பழைய பாடத்திட்டம் இல்லை).

**<u>விண்ணப்பிக்கத் தேவையான குறைந்தபட்ச கல்வித்தகுதி</u>**

1. இத்தேர்விற்கு விண்ணப்பிக்க குறைந்தபட்ச கல்வித்தகுதி எதுவும் தேவையில்லை. (No Minimum educational Qualification)

2. அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 8 ஆம் வகுப்பிற்கும் கீழ் படித்து இடையில் நின்ற 12 1/2 வயது பூர்த்தி அடைந்தவர்களும் இத்தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பிக்கலாம்.

**<u>விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்</u>**

1. **<u>நேரடித் தனித்தேர்வர்கள்</u>** (முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்) நேரடித் தனித்தேர்வர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

2. **<u>தோல்வியுற்ற பாடங்களை தற்போது தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்</u>** ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. **<u>வ.எண்.1 மற்றும் வ.எண்.2ல் காணும் தனித்தேர்வர்கள்</u>**

ரூ.42/–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்றை தவறாமல் விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>குறிப்பு:</u> பிறந்த தேதிக்கு ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / நோட்டரி / நோட்டரி பப்ளிக்கிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் / குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) / PAN CARD போன்றவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

**<u>தேர்வுக் கட்டண விவரம்</u>**

**27.01.2020 முதல் 31.01.2020 வரை** கீழ்க்குறிப்பிட்ட தொகையை செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| தேர்வுக் கட்டணம் | : | ரூ.100/– | மொத்தம் ரூ.175/– (ரூபாய் நூற்று எழுபத்தைந்து மட்டும்) |
| பதிவுக் கட்டணம் | : | ரூ.10/– | |
| மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | : | ரூ.10/– | |
| சேவைக்கட்டணம் | : | ரூ.5/– | |
| Online பதிவுக் கட்டணம் | : | ரூ.50/– | |

மேற்காண் தேர்வுக் கட்டணத்தினை சேவை மையத்தில் (Nodal center)நேரில் பணமாக செலுத்த வேண்டும்.

**<u>தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு</u>**

- தேர்வுக்கூட நுழைவுச்சீட்டை இவ்வலுவலகத்தால் பின்னர் தெரிவிக்கப்படும் நாட்களில் இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம். இதற்கான அறிவிக்கை தனியாக வெளியிடப்படும்.

- தேர்வுக்கூட நுழைவுச்சீட்டில் குறிப்பிடப்படும் தேர்வு மையத்தில்தான் தேர்வர் தேர்வெழுத வேண்டும். தேர்வு மைய மாற்றம் குறித்த கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**<u>தேர்வெழுத விரும்பும் மொழி (Medium)</u>**

**தேர்வர் தேர்வெழுத விரும்பும் மொழி (Medium-Tamil, English or Urdu) ஆகியவற்றை கண்டிப்பாக விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.**

**<u>மாற்றுத்திறனாளிகளுக்கான அறிவுரைகள்</u>**

மாற்றுத் திறனாளிகள் / மனநலம் குன்றிய தேர்வர்கள் ஆன்லைனில் விண்ணப்பித்து பதிவிறக்கம் செய்யப்பட்ட மேற்படி விண்ணப்பத்துடன் சலுகைகள் கோரும் கடிதம், உரிய மருத்துவச் சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்களுடன் இணைத்து சேவை மையத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு வருகைபுரிய சேவை மையங்களில் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை தேர்வர்கள் பதிவு செய்ய வேண்டிய கடைசி நாள் : **31.01.2020** மாலை **5.00** மணி.

ஒம்/–

**இயக்குநர்,**
**அரசுத் தேர்வுகள் இயக்ககம்,**
**சென்னை – 6.**

**இடம் :** சென்னை – **600 006**
**நாள் : 03.01.2020**

# தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை

## தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வு
## ஏப்ரல் 2020
## தேர்வுக்கால அட்டவணை

| நாள் | கிழமை | நேரம் | பாடம் |
|---|---|---|---|
| 02.04.2020 | வியாழன் | காலை 10 மணி முதல் 12 மணி வரை | தமிழ் |
| 03.04.2020 | வெள்ளி | காலை 10 மணி முதல் 12 மணி வரை | ஆங்கிலம் |
| 07.04.2020 | செவ்வாய் | காலை 10 மணி முதல் 12 மணி வரை | கணிதம் |
| 08.04.2020 | புதன் | காலை 10 மணி முதல் 12 மணி வரை | அறிவியல் |
| 09.04.2020 | வியாழன் | காலை 10 மணி முதல் 12 மணி வரை | சமூக அறிவியல் |

ஒம்/–

இயக்குநர்

இடம் : சென்னை–6

நாள் : 03.01.2020